Judicial Form No.53
( See Rule 42 )

**DEPOSITION OF WITNESSES**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.III. TIRUPATHUR**

**Case No. CC. No. 24/2022**

**DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.1 Page.No.**

2025ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ம் நாள் செவ்வாய்க்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.1 வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி திருமதி. மீனா, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | இளங்கோ | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | பலராமன் | தொழில் | பேக்கரி கடை |
| கிராமம் | நாட்றம்பள்ளி | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 70 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 )on the 15th day of April 2025.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை : எதிரி ஆஜர்**

நான் நாட்றம்பள்ளியில் வசிக்கிறேன். நான் பேக்கரி கடை வைத்துள்ளேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். முத்துவேல், எனது மருமகன். அவரும் பேக்கரி கடை நடத்தி வருகிறார். தேதி மாதம் நினைவில்லை. சுமார் 3 ஆண்டுகளுக்கு முன்பு எனது மருமகன் முத்துவேல் தங்கைக்கு குழந்தை பிறந்துள்ளதாகவும், அவர் மருத்துவமனைக்கு சென்று பார்த்து வருவதாகவும், என்னை அவரது பேக்கரியை பார்த்துக்கொள்ளும்படியும் சொல்லிவிட்டு சென்றார். அதன்படி நான் பேக்கரியை பார்த்துக்கொண்டிருந்தேன். அப்போது, ஆஜர் எதிரி பேக்கரிக்கு வந்து மக்கன்பேடா வாங்குவதற்காக கேட்டார். நான் ஒரு துண்டு மக்கன்பேடா ரூ. 20/- என்று சொன்னேன். அவர் அதனை ரூ. 10/- க்கு கேட்டார். ஆனால், என்னால் அந்த விலைக்கு கொடுக்கமுடியாது என்றும், ஒரு கிலோ வாங்கினால் ரூ. 350/- க்கு தருவதாகவும், கூறினேன். ஒரு துண்டு ரூ. 10/- க்கு கொடுக்கிறார்கள் நீயும்

அவ்வாறு கொடு என்று கேட்டார். நான் மறுத்துவிட்டேன். அப்போது எனது மாமா ராஜா பாதர் என்பவரும் அங்கிருந்தார். ஆஜர் எதிரி உடனே என்னை பார்த்து மது போதையில் கெட்ட வார்த்தையில் திட்டினார். மேலும், மக்கன்பேடா கொடுக்கவில்லை என்றால் கடையை காலி செய்து விடுவேன், உன்னையும் கொலை செய்து விடுவேன் என்று மிரட்டினார்.

மேலும், என்னை அடிக்க வந்தார். மேலும், ஒரு கருங்கல்லால் என் தலை மீது அடித்து விட்டார். அதனால் எனக்கு தலையில் ரத்தம் நிற்காமல் வந்து கொண்டிருந்தது. எனவே நான் நாட்றம்பள்ளி அரசு மருத்துவமனைக்கு சென்றேன். ஆனால் அவர்கள் திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு செல்லும்படி கூறினார்கள். நான் திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தேன். அங்கு எனக்கு ஐந்து தையல் போட்டார்கள். நான் மருத்துவமனையில் இருந்தபோது போலீசார் அங்கு வந்து என்னை விசாரித்து எழுதி கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் கருங்கல்லால் தான் ஆஜர் எதிரி என் தலை மீது தாக்கினார். அந்த **கருங்கல் சா.பொ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**</u>

எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை. குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. எனவே குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டது.

சாட்சியின் கையொப்பம்